பல ஆறுகள் ஓடிக் கடலில் கலந்து கொள்கின்றன. அந்தத் தண்ணீரை யெல்லாம் கேரள அரசாங்கம் நல்லுறவோடு இந்த மாநிலத்திற்குப் பகிர்ந்து தந்தால் இந்த மாநிலத்தில் உணவுப் பிரச்சினை தீர்வுக்கு வரப்பிரசாதமாக இருக்கும். அதுமட்டுமல்ல, பல கடிதப் போக்குவரத்துகள், மாநாடுகள் போட்டு இந்தப் பிரச்னைமீது பலவிதமான விவாதங்கள் நடந்திருக்கின்றன. இப்பொழுது திடீரென்று ஒரு திருப்பம் வந்திருக்கிறதோ என்று ஐயம் ஏற்படு கின்ற முறையிலே பத்திரிகைச் செய்திகள் கூறுவதால் இதைப்பற்றி நமது அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளையும், மேற்கொண்டு என்ன ஆக்க பூர்வமான காரியங்களை நடத்தலாம் என்பதை நம் மாண்புமிகு முதலமைச்ச ரவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களும் என்ன நடவடிக்கை மேற் கொள்ளப் போகிறார்கள் என்பதைத் தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த அவையின் மூலம் தாங்கள் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்பதற்கு இது முக்கியமான பிரச்னை என்பதால் சபையை ஒற்றி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அவைத் தலைவரவர்களே, இந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்த மாவட்டத்து விவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாத, அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு திட்டம். ஆகவே, இது பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. இப்பொழுது கேரள சட்டமன்றத்தில் முதலமைச்சரவர்கள் சிலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளில் ஓரளவுக்கு சிலவை குற்றச் சாட்டு போலவும் அமைந்திருக்கிறது. தமிழக அரசு பேச்சு வார்த்தைகளுக்கு கூடத் தயாராகயில்லை என்பது போலவும், தமிழக அரசு தன்னிச்சையாக சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருப்பதுபோலவும், அப்படியிருந்தால் வேறு நடவடிக்கைகளையும் நாங்கள் எடுப்போம் என்பதுபோலவும் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, இது தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகவும் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று, மிக முக்கியமாகக் கவனிக்கத் தக்க ஒன்று என்பதால் இந்தச் சபையின் நிகழ்ச்சியை ஒற்றிவைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பாண்டியாறு—புன்னம் புழா நதிகளின் நீரை மின்சாரத்திற்குப் பயன்படுத்துவதோடு விவசாயத் திற்கும் பயன்படுத்தலாமா என்று தமிழ்நாடு அரசு யோசித்தது உண்மை. ஆனால் கேரள அரசைக் கலந்து கொள்ளாமல் அந்த முயற்சியில் ஈடுபடவோ, சாலியாறுக்குச் செல்ல வேண்டிய தண்ணீரைத் தடுத்து கேரள மக்களுக்கு பாதகமாக தமிழ்நாட்டு விவசாயத்துக்கு பயன்படுத்திக்கொள்ள, எந்தவித தடுப்புகளை அமைக்கவோ இந்த அரசு முற்படவில்லை.

இதுபற்றி கேரள அரசுக்கு பிப்ரவரி 19-ஆம் தேதியில் தமிழக அரசு ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. அதில், கேரள அரசுடன் உடன்பாடு ஏற்படும் வரையில் பாண்டியாறு—புன்னம்புழாவிலிருந்து தண்ணீர் திருப்பிவிட மாட்டாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறது. என்ன காரணத் தாலோ, அந்தக் கடிதம் கேரள முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படவில்லை என்று அறிகிறேன். நேற்று, அவர் கேரள சட்டமன்றத்தில்

வெளியிட்ட கருத்தினை அறிந்ததும், உடனடியாக நான், அவருக்கு ஒரு கடிதம் எழுதியதோடு அதில் பிப்ரவரி 19-ல் தமிழக அரசு எழுதியுள்ள கடிதத்தையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

இது சம்பந்தமாக முதலில் இரு மாநில அதிகாரிகளும் சந்தித்துப் பேசி, பிறகு அமைச்சர்கள் மட்டத்தில் பேசி அதற்குப் பிறகு ஒரு உடன்பாட்டுக்கு வரலாம் என்றும் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன்.

மின்சார உற்பத்திக்குப் பதிலாக பாண்டியாறு—புன்னம்புழா தண்ணீரை நாம் விவசாயத்துக்கு பயன்படுத்தப் போவதாக கேரள முதல்வர் கூறுவது சரியானதல்ல.

மின்சார உற்பத்திக்குத் தேவையானது போக விவசாயத்திற்குத் தண்ணீரைப் பயன்படுத்தலாமா என்பதுதான் தமிழக அரசின் எண்ணமாகும். அதனை ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றும் முயற்சி எதும் தமிழக அரசுக்குக் கிடையாது. கேரள அரசிற்கும், நமக்கும் சுமுகமான உறவே இருந்து வரு கிறது. அந்த உறவின் அடிப்படையில் இரண்டு அரசுகளும் இந்தப் பிரச்சினை யைத் தீர்த்துக் கொள்வதில் எந்த விதமான சங்கடமும் இருக்காது என்று நான் நம்புகிறேன். பத்திரிகைகளிலே கேரள முதலமைச்சர் அவர்கள் கேரள சட்ட மன்றத்தில் பேசி இருப்பதாக வந்திருக்கிறது. அந்தச் செய்தியின் அடிப் படையில்தான் நேற்றைய தினம் அவருக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும், மாண்புமிகு சுப்ரமண்யம் அவர்களும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தை அளித்திருக்கிறார்கள். நானும் அந்த அடிப்படையில் இங்கே எனது பதிலைத் தந்திருக்கிறேன். அவர் என்னென்ன பேசினார் என்பதெல்லாம் அதிகார பூர்வமாக நமக்குக் கிடைத்த பிறகுதான் அதைப்பற்றி முடிவாக நிர்ணயிக்க வேண்டும். என்ன இருந்தாலும் மாநில அரசுகளுக்கு இடையே உறவு நிலையிலே இதைப் போன்ற விஷயங்களை பேசித் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியிருக் கிறது. இப்படிப் பேசித் தீர்க்கப்பட வேண்டுமென்பதிலே நாம் ஆழ்ந்த அக்கறை உள்ளவர்கள் என்பதை இந்த மன்றத்திலே உள்ள அனைவரும் நன்கு அறிவார்கள்.

நமது மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், மற்ற மாநிலங்களோடு பிரச்னைகளைப் பேசித் தீர்ப்பதிலே எந்த விதமான தவறும் இல்லை என்பதை தான் பொன்னப்ப நாடாரிடத்திலே மிகுந்த பணிவோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏதோ நடக்கிற அரசு கழக அரசு என்ற காரணத்திற்காக மற்ற மாநில அமைச்சர்கள் நம்மைப் பற்றிச் சொல்லும் செய்திகளை யெல்லாம் தலைப்புக் கொடுத்து வெளியிடுகிற நேரத்திலே நாங்கள் நாட்டிலே திறமைக் குறைவாக நடந்து கொள்வதாகச் செய்திகளை வெளியிடுகின்றன. அதிலும் குறிப்பாக பொன்னப்ப நாடார் அவர்கள் சார்ந்து இருக்கிற கட்சிப் பத்திரிகை ஏதோ தலைப்புக் கொடுத்து நம்முடைய மாநிலத்தைப்பற்றிக் குறைவாக மதிப்பிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நவசக்திப் பத்திரிகையில் கருணாநிதிக்கு கேரள முதலமைச்சர் எச்ச ரிக்கை என்று வருகிறது. இப்படிக் கேரள மாநிலத்தில் உள்ள அவர்கள் பத்திரிகைகளில் கூட எச்சரிக்கை விடுவதாக, அந்த மாநிலத்தில் அவர்களுக்கு எதிரான பத்திரிகைகளில்கூட இப்படிச் செய்திகளை வெளியிடமாட்டார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் நாங்கள் தமிழக அரசில் இருக்கும் ஒரே ஒரு பாவத்தால் எந்த மாநிலத்தில் எந்த அமைச்சர் எந்தச் செய்தியைச்

சொன்னாலும் அது எங்களுக்காக விடப்படுகிற எச்சரிக்கையாக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் இங்கே உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்தான் அங்கே முதலமைச்சராக இருக்கிறார்கள். இங்கே உள்ள கம்யூனிஸ்ட் பத்திரிகைகளிலே இதைப் போன்ற செய்திகள் வருமா என்றால் வராது. அவர்கள் இந்த மாநிலத்தில் உரிமைகள் என்று வரும்போது இந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக நிற்பார்கள். அந்த அந்த மாநிலத்தின் உரிமை களுக்காக ஆங்காங்கு இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி வாதாடும். அதே போல் தான் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இது ஏதோ கழக அரசிற்கு வருகிற ஆபத்து, அதற்கு மாத்திரம் தருகிற பதில் என்று எண்ணாமல் தமிழ்நாட்டு மக்களின் உரிமை பாதிக்கப்படுகிற நேரத்திலே நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில் இயங்க வேண்டுமென்று இதனை எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன். கேரள அரசுக்கும், நமக்கும் இருக்கிற சுமுகமான சூழ்நிலையை கேரள முதல் மைச்சரோடு பேசித் தீர்த்துக் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதை எடுத்து விளக்க இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவிலே இதை விவாதிக்கத் தேவையில்லை, விட்டு விடலாம் என்று தங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு எந்த விவாதமும் இதன் மீது தேவையில்லை என்ற வகையிலே இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

### (4) அறிவிப்புகள்.

**(அ) சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவும், (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவும் (சட்டப்பேரவை மசோதா எண் 5/1971), சட்ட மன்ற மேலவையில் 1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாளன்று ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை என்று சட்ட மன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.

### 5. அரசினர் மசோதா.

**1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : அடுத்து, அலுவல் அரசினர் மசோதா, 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்* : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவைப் பேரவைக்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.